# ஜெயங்கொண்டம் நகராட்சி.

| DATE OF MEETING OF THE COUNCIL | MCR No | SERIAL NUMBER AND SUBJECT IN THE AGENDA | DECISION OF THE COUNCIL |
|---|---|---|---|
| 31.07.20 | | ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31.07.2020 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்டம்.<br>**தனி அலுவலர்**<br>**ஜெயங்கொண்டம் நகராட்சி.** | |
| 31.07.20 | 229 | **பொருள்.1**<br>ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையர் அவர்களின் 06/2020 மற்றும் 07/2020 ஆம் மாதங்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் பார்வையிட்டு, பதிவு செய்யலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 31.07.20 | 230 | **பொருள் : 2**<br>ஜெயங்கொண்டம் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் 4 எண்ணிக்கை TATA ACE வாகனங்களுக்கு (TN-61 R 4771, TN-61 R-4776, TN-61 R-4719 மற்றும் TN-61 R-4701) ஆயில் சர்வீஸ் மற்றும் இதர பழுதுப் பணிகளை அரசு அங்கீகாரம் பெற்ற சிவம் மோட்டார்ஸ், கும்பகோணம் என்ற நிறுவனத்தில் மேற்கண்ட பணிகளை நல்ல முறையில் செய்து தற்சமயம் வாகனம் பொது சுகாதாரப் பிரிவில் பயன்பாட்டில் உள்ளது.<br><br>மேற்காணும் பணிக்கு நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய பட்டியல் தொகை ரூ.21,974/-ஐ நிறுவனத்திற்கு வழங்கலாம். செலவினத் தொகையை நகர் மன்றத்தின் முன் அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.1045/2020/அ4** | அனுமதிக்கப்பட்டது |
| 31.07.20 | 231 | **மன்றப் பொருள் : 3 (231)**<br>ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2015-2016 ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இலையூர் (கிழக்கு) கிராமம் சர்வே எண்.519/5 மற்றும் 519/6-ல் கலவை உரக்கிடங்கு அமைக்கும் பணி நடைபெற்ற நேரத்தில் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக தற்காலிக மின் இணைப்பு நகராட்சி ஆணையர் பெயரில் பெறப்பட்டது.<br><br>மேற்கண்ட பணியானது பகுதிப்பணியில் நிறுத்தப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.29835/2018/P3 நாள்.11.12.2018ன்படி, நுண் உரம் தயாரிக்கும் பணியாக மாற்றம் செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. தற்சமயம் நுண் உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளவுள்ள ஒப்பந்ததாரர் தற்காலிகமாக மின் இணைப்பு பெற்று தருமாறு கோரியுள்ளார். | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | இந்நிலையில், கலவை உரக்கிடங்கு அமைக்கும் பணிக்காக பெறப்பட்ட மின் இணைப்பிற்குண்டான நாளது தேதி வரையிலான நிலுவை தொகை ரூ.53,315/-னை செலுத்தும்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து கேட்பு வரப்பெற்றுள்ளது. தற்சமயம் மேற்கண்ட கலவை உரக்கிடங்கு அமைக்கும் பணியின் ஒப்பந்ததாரர் இல்லாத நிலையிலும், மேற்கண்ட நுண் உரம் தயாரிக்கும் (MCC) பணியானது திட்டப்பணி என்பதாலும் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய கேட்புத் தொகை ரூ.53,315/-ஐ நகராட்சி மூலம் செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை செலுத்தலாம்.<br>**<u>ந.க.எண்.1832 / 2003 / அ2</u>** | |